

# பாடம் 13

மார்ச் 21-27

# தூளிலிருந்து நட்சத்திரங்களுக்கு

## ஓய்வுநாள் பிற்பகல்

**இவ்வார ஆராய்ச்சிக்கு:** *தானியேல் 12; ரோமர் 8:34; லூக்கா 10:20; ரோமர் 8:18; எபி 2:14, 15; யோவான் 14:29; வெளி 11:3.*

**மனன வசனம்:** ஞானவான்கள் ஆகாயமண்டலத்தின் ஒளியைப்போலவும், அநேகரை நீதிக்குட்படுத்துகிறவர்கள் நட்சத்திரங்களைப்போலவும் என்றென்றைக்குமுள்ள சதாகாலங்களிலும் பிரகாசிப்பார்கள். தானியேல் 12:3.

யூதேயாமீது படையெடுத்து சிறைப்பிடிக்கப்பட்டவர்களை பாபிலோனுக்கு நேபுகாத்நேச்சார் அழைத்துச் செல்வதில் தானியேல் புத்தகம் துவங்குகிறது; முடிவுகால பாபிலோனிலிருந்து தேவமக்களை விடுவிக்க மிகாவேல் எழுந்து நிற்பதில் தானியேல் புத்தகம் முடிவடைகிறது. தேவன் தம் மக்களுக்கு ஆதரவாக எல்லாம் முடிக்கிறார்.

தானியேலும் அவருடைய தோழர்களும் தேவனுக்கு உண்மையாக இருந்தார்கள். சிறையிருப்பின் சோதனைகளுக்கும் சவால்களுக்குமிடையே இணையற்ற ஞானத்தை வெளிப்படுத்தினார்கள். அதேபோல், உபத்திரவத்தை எதிர்கொள்ளும்போது, முடிவுகால தேவமக்களும் உண்மையுள்ளவர்களாக இருப்பார்கள். குறிப்பாக 'யாதொரு ஜாதியாரும் தோன்றினதுமுதல் அக்காலமட்டும் உண்டாயிராத ஆபத்துக்காலம் வரும்போதும்' உண்மையுள்ளவர்களாக இருப்பார்கள். தானி12:1. தானியேல் போல, இவர்களும் ஞானத்தை ஒரு தனிப்பட்ட நல்லொழுக்கமாக அனுபவிப்பது மட்டுமல்லாமல், அந்த ஞானத்தின் விளைவாக, மற்றவர்களை நீதியைநோக்கி அழைத்துச்செல்வார்கள். சிலர் இறந்துவிடுவார்கள்; அல்லது, கொல்லப்படுவார்கள். இதனால், தூளுக்குத் திரும்புவார்கள். ஆனால் நித்தியத்திற்கு எழுப்பப்படுவார்கள். 'பூமியின் தூளிலே நித்திரைபண்ணுகிறவர்களாகிய அநேகரில் சிலர் நித்தியஜீவனுக்கு விழித்து எழுந்திருப்பார்கள்.' தானி 12:2.

*2020, மார்ச் 28 வகுப்புக்காகப் படிக்கவேண்டிய பாடம்*

ஞாயிறு மார்ச் 22

# மிகாவேல், நம் அதிபதி

**கேள்வி: காலத்தின் முடிவில் வரலாற்றின் போக்கை மாற்றுவது யார்? இதன் அர்த்தத்தைப் புரிந்துகொள்ள ரோமர் 8:34 உம் எபிரெயர் 7:25 உம் எவ்வாறு உதவுகின்றன? தானியேல் 12:1.**

அஞ்ஞான தேசஅரசர் ஒருவர் பெயரைக் குறிப்பிட்டே தானியேல் புத்தகத்தின் ஒவ்வோர் அதிகாரமும் இதுவரை தொடங்கியுள்ளது. தானியேல் 12உம் இதேபோல ஒரு அரசரிடமிருந்து தொடங்குகிறது, ஆனால், மற்ற அதிகாரங்களைப் போலல்லாமல், தெய்வீக அதிபதியின் பெயரோடு துவங்குகிறது. தேவ மக்களை எதிரிகளின் கைகளிலிருந்து விடுவிக்க அவர் எழும்புகிறார்.

தானியேல் 10ல், இதெக்கேல் ஆற்றில் தானியேலுக்குக் காட்சியளித்த பரலோக நபர் மிகாவேல். அங்கே அவர் தேவமக்களின் பரலோகப் பிரதிநிதியாக வெளிப்பட்டார். அவர் தானியேல்7 இல் மனுஷ குமாரனாகவும், தானியேல் 8இல் சேனைகளின் அதிபதியாகவும், தானியேல் 9 இல் பிரபுவாகிய மேசியாவாகவும் தோன்றுகிறார். ‘தேவனைப் போன்றவர் யார்?’ எனும் அர்த்தமுடைய மிகாவேல் என்னும் பெயருடையவர் இயேசுவே.

மிகாவேல் தலையிட்ட நேரத்தைக் கவனிக்கவேண்டும். தானியேல் 12:1இன் படி, அது ‘அக்காலத்தில’’ நிகழ்கிறது. தானி 12:1. இது தானியேல் 11:40-45-ல் குறிப்பிடப்பட்டுள்ள நேரத்தைக் குறிக்கிறது. இது 1798 இல் போப்பாண்டவரின் வீழ்ச்சியிலிருந்து காலத்தின் முடிவில் உயிர்த்தெழுதல்வரை நீடிக்கிற காலம். தானி 12:2.

**மிகாவேல் செய்கிற வேலையின் இரண்டு முக்கிய அம்சங்களை தானி 12:1 இன் ‘எழும்புவான்’ என்கிற வினைச்சொல் காட்டுகிறது.**

**முதலாவதாக,** ‘எழும்புவான்’ என்கிற வினைச்சொல் வெற்றிபெற்று ஆட்சி செய்ய ஒரு **மன்னர் எழும்புவதைக்** காட்டுகிறது. இது ஒரு இராணுவத் தன்மை. மாபெரும் போராட்டத்தின் கடைசிக் கட்டத் தில் மிகாவேல் தனது மக்களைப் பாதுகாத்து, அவர்களை சிறப்பான ஒரு வழியில் நடத்துகிற ஒரு இராணுவத்தலைவராக செயல்படுகிறார் என்பதை இது காட்டுகிறது.

**இரண்டாவதாக,** ‘எழும்புவான்’ என்கிற வினைச்சொல் நீதிமன்ற அமைப்பையும் சுட்டிக்காட்டுகிறது. **பரலோக நீதிமன்றத்தில் ஒரு வழக்கறிஞராகச்** செயல்பட மிகாவேல் ‘நிற்கிறார்’. மனித குமாரனாக, விசாரணையின்போது தேவமக்களுக்காக அவர் நீண்ட ஆயுசுள்ளவர் முன்பாக வருகிறார். தானி 7:9-14. இவ்வாறு மிகாவேலின் வேலையில் இராணுவ, நீதித்துறை அம்சங்கள் உள்ளன. தேவனுடைய எதிரிகளைத் தோற்கடிக்கும் சக்தியோடும், பரலோக நீதிமன்றத்தில் தேவமக்களின் பிரதிநிதியாகவும் அவர் நிற்கிறார்.

---

இப்போதுகூட மிகாவேல் நம் சார்பாக நிற்கிறார் என்பதின் அர்த்தம் என்ன? பாவியான உங்களுக்கு அது என்ன நம்பிக்கையைத் தரவேண்டும்?

# புத்தகத்தில் எழுதப்பட்டுள்ளது

**கேள்வி: 'புத்தகத்தில் எழுதப்பட்டவர்களைப் பற்றி' தானியேல் 12:1 பேசுகிறது. இதன் பொருள் என்ன?**

---

மிகாவேலின் தலையீட்டின் நேரமும் ஆபத்து காலமே. கலகம் செய்த மனிதகுலத்திலிருந்து தேவஆவி விலக்கப்படும் காலம் இது. தேசங்களின் மீது தேவகோபத்தின் வெளிப்பாடாக இறுதிக்கால பாபிலோன்மீது கடைசி ஏழு வாதைகள்ஊற்றப்படும். வெளி 16; 18:20-24. அந்தகாரச் சக்திகள் உலகத்தின் மீது கட்டவிழ்த்து விடப்படும். 'சாத்தான் பூமியில் வசிப்பவர்களை ஒரு பெரிய ஆபத்தில் மூழ்கடிப்பான். தேவதூதர்கள் மனித உணர்வாகிய கடுமையான காற்றுகளை இதுவரை தடுத்துவந்தார்கள்; அந்தத் தடையை அப்போது நீக்கி விடுவதால், சண்டையின் அனைத்துத் தன்மைகளும் கட்டவிழ்த்து விடப்படும். பழங்கால எருசலேமுக்கு வந்ததைவிட பயங்கரமான அழிவில் முழு உலகமும் மாட்டிக்கொள்ளும்.' *GC*, பக். 614.

ஆனால் இந்தக் கொடூரமான காலத்தில் தேவமக்கள் விடுவிக்கப்படுவார்கள், ஏனென்றால், பரலோக விசாரணையில், பரலோக பிரதான ஆசாரியனாகிய இயேசு அவர்களை நீதிமான்கள் ஆக்கியிருக்கிறார்; அவர்களுடைய பெயர்கள் புத்தகத்தில் எழுதப்பட்டுள்ளன.

வேதாகமம்இரண்டு வகையான பரலோக புத்தகங்களைக் குறிப்பிடுகிறது என்பதை நாம் நினைவில் கொண்டால், இதன் பொருளைப் புரிந்துகொள்ளலாம். ஒன்றில் ஆண்டவரைச் சேர்ந்தவர்களின் பெயர்கள் உள்ளன; அது ஜீவப்புத்தகம். யாத் 32:32; லூக்கா 10:20; சங். 69:28; பிலி 4:3; வெளி 17:8.

மனித செயல்களின் பதிவுகளைக் கொண்ட வேறு புத்தகங்களையும் வேதாகமம் குறிப்பிடுகின்றது. ஏசா 56:8; மல் 3:16; ஏசா 65:6. ஒருவர் ஆண்டவர்மீது வைத்திருக்கின்ற நம்பிக்கையின் தன்மையைத் தீர்மானிக்க பரலோக நீதிமன்றம் பயன்படுத்துகிற புத்தகங்கள் இவை. இவை ஒவ்வொரு மனிதனின் பெயரையும் செயல்களையும் கொண்ட பரலோகப் பதிவுகள்.

தங்கள் பெயர்களும், செயல்களும் பரலோகத்தில் எழுதப்படுவதை சிலர் விரும்புவதில்லை. ஆனால், நம் வாழ்க்கையை கிறிஸ்துவுக்கு ஒப்புக்கொடுத்தவுடன், நம் பெயர்கள் ஜீவப்புத்தகத்தில் எழுதப்படும். நம் கெட்ட செயல்கள் தீர்ப்பில் நீக்கப்படும். நாம் இயேசுவைச் சேர்ந்தவர்கள் என்பதற்கான ஆதாரங்களை இந்தப் பரலோகப் பதிவானது முழுப் பிரபஞ்சத்திற்கும் வழங்குகிறது. எனவே, ஆபத்துக் காலத்தில் அப்படிப்பட்டவர்கள் பாதுகாக்கப்படுவார்கள்.

---

கிறிஸ்துவின் நீதி நம் கணக்கில் எழுதப்படுவதுதான் 'புத்தகத்தில் நம் பெயர் எழுதப்படுவதற்கான' ஒரே நம்பிக்கை. ஏன்?

**செவ்வாய்** மார்ச் 24

## உயிர்த்தெழுதல்

**கேள்வி: தானியேல் 12:2,3இல் அவர் என்ன நிகழ்வைப்பற்றி பேசுகிறார்? மரணத்தைப் பற்றிய நம் நம்பிக்கையின் அடிப்படையில், இந்த நிகழ்வு நமக்கு ஏன் மிகவும் முக்கியமானது?**

---

---

வரவிருக்கும் உயிர்த்தெழுதல் குறித்து பழைய ஏற்பாட்டில் மிகவும் வெளிப்படையான குறிப்பை தானியேல் குறிப்பிடுகிறார். இதில் மிக முக்கியமான சில உண்மைகளைப் பார்க்கிறோம். முதலாவதாக, 'நித்திரை' எனும் உருவகம். மரணம் என்பது தூக்கம்தான். அழியாத எந்த ஆத்துமாவும் மனித உடலில் வசிக்கவில்லை. உடல், மனம், ஆவி ஆகியவற்றில் எதையும் தனியாகப் பிரிக்கமுடியாது. மரிக்கிற ஒருவர் உயிர்த்தெழுதல்வரை தூக்கத்தில் இருக்கிறார். இரண்டாவதாக, பாவத்தின் விளைவாக என்ன நடந்ததோ, உயிர்த்தெழுதலில் அது தலைகீழாக நடக்கிறது. தானியேல் 12:2 இல் வருகிற 'பூமியின் தூள்' என்கிற சொற்றொடரானது மூலமொழியில் 'தூளாகிய பூமி' என்று உள்ளது. இந்த அசாதாரணச் சொல்வரிசை ஆதியாகமம் 3:19 ஐச் சுட்டிக்காட்டுகிறது. ஆதாமின் வீழ்ச்சியில் கொடுக்கப்பட்ட மரணத் தீர்ப்பு இனி தலைகீழாக மாறும் என்பதையும், மரணம் இனிமேல் ஆளுகை செய்யாது என்பதையும் இது குறிக்கிறது. பவுல் சொல்வதுபோல், 'மரணம் ஜெயமாக விழுங்கப்படும்' 1 கொரி. 15:54.

**கேள்வி: என்ன காரணங்களுக்காக நாம் மரணத்திற்கு அஞ்சத் தேவையில்லை? ரோமர் 8:18; எபிரெயர் 2:14, 15.**

---

---

மரணம் இங்குள்ள அனைத்தையும் அழித்து முடிக்கிறது. ஆனால் உண்மையான விசுவாசிகளுக்கு மரணம் என்பது முடிவு அல்ல. மரணம் தோற்றுப்போன ஒரு எதிரி. கிறிஸ்து மரணத்தின் சங்கிலிகளை உடைத்து, கல்லறையிலிருந்து உயிர்த்தெழுந்தது, மரணத்திற்கு மரண அடி கொடுத்துவிட்டார். இப்போது நாம் மரணத்தின் தற்காலிக யதார்த்தத்திற்கு அப்பால் கிறிஸ்துவில் தேவனிடமிருந்து பெறும் வாழ்க்கையின் நிஜ யதார்த்தத்தைப் பார்க்கமுடியும். ஏனெனில் மிகாவேல் 'எழும்புவதை' தானியேல் பார்க்கிறார். தானி 12:1. அவருக்குச் சொந்தமானவர்களும் எழும்புவார்கள். 'தூளாகிய பூமியிலிருந்து' அவர்கள் உயர்ந்து, நட்சத்திரங்களைப் போல எப்போதும் பிரகாசிப்பார்கள்.

வாழ்க்கையின் வேதனைகள், போராட்டங்களுக்கு மத்தியில், உயிர்த்தெழுதல்பற்றிய வாக்குறுதியிலிருந்து நம்பிக்கையும் ஆறுதலும் எவ்வாறு பெற முடியும்? ஏன் வேறு எதுவும் முக்கியமில்லை?

**புதன்** மார்ச் 25

## முத்தரிக்கப்பட்ட புத்தகம்

**கேள்வி: தானியேலின் புத்தகம் முடிவு காலம்வரை முத்தரிக்கப்பட்டிருக்க வேண்டும்? தானியேல் 12:4; யோவான் 14:29.**

தானியேல் புத்தகத்தின் கடைசி முக்கியப் பகுதியாகிய தானி 10:1-12:4 இன் முடிவில், 'முடிவு காலம்வரை இந்த புத்தகத்திற்கு முத்திரை போடு' என்று தேவன் சொன்னார். அதைத் தொடர்ந்து, 'அநேகர் இங்குமங்கும் ஓடி ஆராய்வார்கள், அறிவும் பெருகிப்போம்' என்றும் சொன்னார். தானி12:4. சிலர் இந்த வார்த்தைகளை விஞ்ஞான முன்னேற்றத்தின் முன்கணிப்பாக எடுத்துக்கொண்டாலும், 'இங்குமங்கும்' ஓடுவது என்பது தானியேல் புத்தகத்தை ஆராய்வதைக் குறிக்கிறது. வரலாற்றைப் பார்க்கும்போது, தானியேல் புத்தகம் பல நூற்றாண்டுகளாக புரியாத புத்தகமாகவே இருந்தது. சில பகுதிகள் புரிந்திருக்கலாம். ஆனால், அதன் சில முக்கிய போதனைகள் மர்மமாகவே இருந்தன. உதாரணமாக, பரலோக ஆசரிப்புக் கூடாரச் சுத்திகரிப்பு, நியாயத்தீர்ப்பு, சின்ன கொம்பு, அதன் வேலை போன்றவை. இவற்றில் காலம் தொடர்புடைய தீர்க்கதரிசனங்களும் தெளிவாகப் புரியவில்லை.

ஆனால், புரொட்டஸ்டன்ட் சீர்திருத்தத்திலிருந்து, அதிகமான மக்கள் தானியேல் புத்தகத்தைப் படிக்கத் தொடங்கினர். ஆயினும், முடிவுகாலத்தில்தான் புத்தகம் திறக்கப்பட்டது. அதன் கருத்து முழுமையாக வெளிப்பட்டது. எலன் ஜி. ஒய்ட் குறிப்பிடுவதைப் போல, '1798 முதல் தானியேல் புத்தகத்தின் முத்திரை உடைக்கப்பட்டுவருகிறது. தீர்க்கதரிசனங்களைப் பற்றிய அறிவு அதிகரித்துள்ளது. மேலும் பலர் விசாரணை சமீபம் என்கிற செய்தியை அறிவித்துவருகின்றனர்.' *GC,* பக். 356. '18 ஆம் ஆண்டின் இறுதியிலும், 19 ஆம் நூற்றாண்டின் தொடக்கத்திலும் தானியேல்-வெளிப்படுத்தல் தீர்க்கதரிசனங்களில் ஒரு புதிய ஆர்வம் பூமியில் ஆங்காங்கு ஏற்பட்டது. இந்த ஆராய்ச்சியால் கிறிஸ்துவின் இரண்டாவது வருகை நெருங்கிவிட்டது என்கிற நம்பிக்கை பரவினது. இங்கிலாந்தில் ஏராளமான வேதமாணாக்கர்கள், மத்திய கிழக்கில் ஜோசப் வோல்ஃப், தென் அமெரிக்காவில் மானுவல் லாகுன்சா, அமெரிக்காவில் வில்லியம் மில்லர் ஆகியோர் தானியேல் தீர்க்கதரிசனங்களைப் பற்றிய ஆராய்ச்சியின் அடிப்படையில் இரண்டாம் வருகையை அறிவித்தனர். இன்று இந்த நம்பிக்கை உலகளாவிய இயக்கத்தின் உந்து சக்தியாக மாறியுள்ளது.'- *4SDABC,* பக். 879.

வரலாற்றை திரும்பிப் பார்க்கவும், தானியேலின் இந்த வரலாற்றுத் தீர்க்கதரிசனங்கள் எவ்வாறு நிறைவேயுள்ளன என்பதைப் பார்க்கவும் இன்று நமக்கு கிடைத்திருக்கும் நன்மையைப் பற்றிச் சிந்தியுங்கள். தேவனுடைய வாக்குறுதிகள் அனைத்தையும் நம்புவதற்கு இது எவ்வாறு உதவ வேண்டும்?

# காத்திருக்கும் நேரம்

**கேள்வி:** **புத்தகம் எவ்வாறு முடிகிறது? தானியேல் 12:5-13.**

இந்த இறுதிக் காட்சி தானியேலின் கடைசி தரிசனம் கிடைத்த இடமான இதெக்கேல் ஆற்றில் நடைபெறுகிறது. தானி 10:4. ஆனாலும், இங்கு 'ஆறு' என்பதற்கான எபிரேய வார்த்தை வரவில்லை; யோர் எனும் எகிப்திய வார்த்தை வருகிறது. நைல் நதியை இது நினைப்பூட்டுகிறது. யாத்திராகமத்தில் கர்த்தர் இஸ்ரவேலை எகிப்திலிருந்து மீட்டது போல, அவர் தம்முடைய முடிவுகால மக்களை மீட்டுக்கொள்வார் என்பதையும் காட்டுகிறது.

மூன்று தீர்க்கதரிசன காலங்கள் வருகின்றன. முதலாவது - 'ஒரு காலம், காலங்கள், அரைக்காலம்'. 'இந்த ஆச்சரியமானவைகளின் முடிவுவர எவ்வளவுகாலம் செல்லும்?' என்ற கேள்விக்கு இது பதிலளிக்கிறது. தானி12:6. 'ஆச்சரியமானவைகள்' என்பது தானியேல் 11 இல் சொல்லப்பட்டுள்ளவை ஆகும். தானியேல் 7க்கும் 8க்கும் விளக்கமாக தானியேல் 11 உள்ளது. இந்தக் காலத்தை தானியேல் 7:25; வெளி 11:3; 12:6, 14; 13:5 ஆகியவற்றில் பார்க்கிறோம். இது 538 முதல் 1798 வரை இருந்த 1,260 ஆண்டு போப்பாண்டவர் மேலாதிக்கத்தின் காலம் ஆகும். தானியேல் 11:32-35 அந்த உபத்திரவ யுகத்தை அதன் காலத்தைச் சொல்லாமல் பேசுகிறது.

மற்ற இரண்டு காலங்கள் 1,290 நாட்களும் 1,335 நாட்களும். 'இவைகளின் முடிவு என்னமாயிருக்கும்?' என்று சணல்வஸ்திரம் தரித்தவரிடம் தானியேல் கேட்ட கேள்விக்கு அது பதில். இரண்டுமே 'அன்றாடம்' அகற்றுதல், 'பாழக்கும் அருவருப்பை ஸ்தாபித்தல்' ஆகியவற்றிலிருந்து தொடங்குகின்றன. தானியேல் 8இன் விளக்கத்தில், 'அன்றாடம்' என்பது கிறிஸ்துவின் தொடர்ச்சியான பரிந்துபேசுதல் என்று பார்த்தோம், ஒரு கள்ளத் தொழுகை முறையால் இது மாற்றப்பட்டது. ஆகவே, இந்தத் தீர்க்கதரிசனக் காலம் 508 இல் துவங்குகிறது. இந்த ஆண்டில் ஃபிராங்க்கின் ராஜாவான க்ளோவிஸ் கத்தோலிக்க நம்பிக்கைக்கு மாறினான். இந்த நிகழ்வால் சபைக்கும் அரசுக்கும் இடையிலான ஐக்கியம் தோன்றியது. 1798 ஆம் ஆண்டில் 1,290 நாட்கள் முடிவடைந்தன. நெப்போலியனால் போப் கைதுசெய்யப்பட்டார். தானியேலில் குறிப்பிடப்பட்ட கடைசி தீர்க்கதரிசன காலமாகிய 1,335 நாட்கள் 1843 இல் முடிவடைந்தது. இது மில்லரைட் இயக்கத்தின் காலம் வேதாகமத் தீர்க்கதரிசனங்களைப் பற்றிய புதிய ஆய்வு செய்த காலம். இயேசுவின் உடனடி வருகையை எதிர்பார்த்து காத்திருந்த நேரம்.

தானியேல் புத்தகமானது இரண்டு உண்மைகளை வெளிப்படுத்துகிறது. தேவமக்கள் துன்புறுத்தப்பட்டார்கள். இறுதியில் நியாயப்படுத்தப்பட்டு காப்பாற்றப்பட்டார்கள். நம்முடைய உடனடி சோதனைகளைப் பொருட்படுத்தாமல், உண்மையாக இருக்க முற்படுவதற்கு இந்த உண்மைகள் எவ்வாறு உதவும்?

## மேலும் படிக்க:

'தீர்க்கதரிசனங்களில் பல நிகழ்வுகள் தொடர்ச்சியாகச் சொல்லப்பட்டு, இறுதியில் நியாயத்தீர்ப்புடன் முடியும். இது தானியேல் புத்தகத்திலும் உண்மையே. ஆனால் கடைசி நாட்களுடன் தொடர்புடைய அவருடைய தீர்க்கதரிசனத்தின் அந்தப்பகுதியை முடிவு காலம் வரை முத்திரையிடுமாறு தானியேலிடம் தேவன் சொல்லிவிட்டார். அந்தக் காலத்தை அடையும்வரை இந்தத் தீர்க்கதரிசனங்களின் அடிப்படையில் விசாரணைபற்றிய செய்தியை அறிவிக்க முடியாது. ஆனால் முடிவு காலத்தில் 'அநேகர் இங்குமங்கும் ஓடி ஆராய்வார்கள், அறிவும் பெருகிப்போம்' என்று தீர்க்கதரிசி சொன்னார். தானி 12:4.

'அப்போஸ்தலனாகிய பவுல் தன் நாளில் கிறிஸ்துவின் வருகையை எதிர்பார்க்கவேண்டாம் என்று சபையை எச்சரித்தார். 'விசுவாச துரோகம் முந்தி நேரிட்டு, கேட்டின் மகனாகிய பாவமனுஷன் வெளிப்பட்டாலொழிய, அந்த நாள் வராது' என்றார். 2தெச 2:3. விசுவாசத் துரோகத்திற்குப் பிறகும், 'பாவ மனிதனின்' ஆட்சியின் நீண்ட காலத்திலும், ஆண்டவரின் வருகையை நாம் எதிர்பார்க்க முடியாது. 'பாவ மனுஷன்', 'அக்கிரமத்தின் இரகசியம்', 'கேட்டின் மகன்', 'அக்கிரமக்காரன்' ஆகிய சொற்கள் பாப்பரசைக் குறிக்கிறது, இது தீர்க்கதரிசனத்தில் முன்னறிவிக்கப்பட்டபடி, 1260 ஆண்டுகளாக ஆதிக்கம் செலுத்தியது. இந்தக் காலம் 1798 இல் முடிவடைந்தது. கிறிஸ்துவின் வருகை அதற்கு முன்பு நடக்கமுடியாது. 1798 ஆம் ஆண்டு வரை கிறிஸ்தவ யுகம் முழுவதையும் பவுல் தனது முன்னறிவிப்பால் மூடிவிடுகிறார். அந்தக் காலத்திற்குப் பிறகுதான் கிறிஸ்துவின் இரண்டாவது வருகைச் செய்தியை அறிவிக்கமுடியும்.' – *GC*, பக். 356.

### கலந்துரையாடக் கேள்விகள்

1 *முடிவுகால நிகழ்வுகளுக்குத் தேதிகுறிப்பதன்மூலம் நாம் என்ன ஆபத்துக்களில் மாட்டிக்கொள்ள வாய்ப்பிருக்கிறது? கணிக்கப்பட்ட அந்த நிகழ்வுகள் நிறைவேறத் தவறும்போது பலரின் விசுவாசம் என்ன ஆகும்? யோவான் 14:29இல் உள்ள கிறிஸ்துவின் வார்த்தைகளில் என்ன முக்கியமான தீர்க்கதரிசனக் கொள்கை காணப்படுகிறது? இது நம்முடைய ஆன்மிக நன்மைக்காக தீர்க்கதரிசனத்தை எவ்வாறு பயன்படுத்துவது என்பதைப் புரிந்துகொள்வதற்கும், தவறான கணிப்புகளைச் செய்வதையோ நம்புவதையோ தவிர்க்கவும் எவ்வாறு உதவும்?*

2 *இப்போது உடனடி தகவல்தொடர்பு உள்ளது. அற்புதமான விஞ்ஞான முன்னேற்றங்கள் உள்ளன. 'யாதொரு ஜாதியாரும் தோன்றினதுமுதல் அக்காலமட்டும் உண்டாயிராத ஆபத்துக்காலம் வரும்' என்று நம்புவதை இவை கடினமாக்குகின்றன அல்லவா?*

3 *புத்தகத்தில் நம் பெயர் எழுதப்பட்டிருக்க வேண்டுமானால் கிறிஸ்துவின் நீதி மட்டுமே நம் ஒரே நம்பிக்கையாக இருக்கும். இதுதான் உண்மையான நற்செய்தி. அது இல்லாவிட்டால், நமக்கு என்ன நம்பிக்கை இருக்கும்?*